
AMAR CHITRA KATHA

# உயிர் நண்பர்கள்

Vol 614 | Rs 35

www.amarchitrakatha.com




உயிர் நண்பர்கள்
முன்னொரு காலத்தில் மகத அரசனின் ஆட்சியின் போது, ராஜகிருஹம் என்ற நகரில் ஒரு திருமண விழா நடைபெற்றது.
அருமையான விருந்து!
என்ன கோலாகலம்!
ஏன் கூடாது? மணப்பையனின் தந்தை ஊரிலேயே பணக்கார வியாபாரி.
மணப்பெண் மிக அழகாக இருந்தாள்.
என்ன அழகு பாருங்கள்!
ஜனபத் வியாபாரி மகளுக்கு நிறைய பரிசுகளைக் கொடுத் திருக்கிறார்.
ஆரம்பத்தில் பெண்ணை மிகவும் கனிவுடன் நடத்தினர்.
எந்த வேலையையும் செய்யாதே!
சில மாதங்களில்-
கனவா காண்கிறாய்? கொஞ்சம் ஒத்தாசை செய்ய மாட்டாயா?


சொன்னபடிச் செய்!
ஏன் இப்படி மாறி விட்டார்? நான் என்ன தவறு செய்தேன்?
ஒரு நாள்-
கல்யாணம் ஆகி இரண்டு வருடம் ஆகிவிட்டது, இன்னமும் குழந்தை இல்லை...
மருமகள் எப்படி இருக் கிறாள்?
நம் வம்சத்தை முன்னெடுத்துச் செல்ல ஒரு வாரிசு வேண்டாமா?
ஓ! இதுதான் விஷயமா!
கவலைப்பட்ட மருமகள் தன் வேலைக்காரியிடம் சொன்னாள்
எனக்குக் குழந்தை இல்லாவிட்டால் இந்த வீட்டில் மரியாதை கிடைக்காது.
குழந்தை இருப்பதாகப் பொய் சொல்!
வேலைக்காரியின் உதவியுடன் மருமகள் தான் கர்ப்பமாக இருப்பதாகக் காட்டிக்கொண்டாள். உடனே-
உனக்காக இனிப்பு செய்துள்ளேன்.
நாளடைவில்-
தாய் வீட்டுக்குச் செல்லும் நேரம் வந்துவிட்டது.
பிள்ளை பெற தாய் வீட்டுக்குச் செல்வது தானே வழக்கம்.


தன் வேலைக்காரியுடனும் ஓர் உதவியாளருடனும் அவள் தன் பயணத்தை ஆரம்பித்தாள்.
அதோ மக்கள் குழுவாகச் செல் கிறார்கள்.
போய் சேர்ந்து கொள் வோமா?
ஆம். குழுவாகச் செல்வதுதான் பாதுகாப்பு.
அந்தக் கூட்டம் அன்று மாலை ஒரு தோப்பில் தங்கியது.
அடுத்த நாள்-
என்ன இது? யாரையும் காணோமே?
ஆ! பிறந்த குழந்தை!


அங்கே பாருங்கள்!
குழந்தையை மறந்து விட்டுச் சென்றுவிட்டார் களா?
நான் நினைப் பதையே நீயும் நினைக் கிறாயா?
ஆமாம். இனி இது உங்கள் குழந்தை.
எழுந்திரு! நம் அம்மா வுக்குக் குழந்தை பிறந்துள்ளது.
என்னது?
குடும்பத்துக்கு இந்த நல்ல செய்தி யைச் சொல்.
குதிரையில் போ.
உதவியாளர் திரும்ப வந்தார்.
ஒரு அவசரச் செய்தி!
அம்மா..
நீங்கள் உடனே திரும்ப வேண்டும்.
இனி தாய் வீட்டுக்குப் போகவேண்டிய அவசிய மில்லை.
அவர்கள் ராஜகிருஹத்துக்குத் திரும்ப வந்தனர்.
ஒரு வாரிசு!
என்ன அழகு! இதை விமரிசையாகக் கொண் டாட வேண்டும்.


பெயர் வைக்கும் விழா-
பையன் ஆலமரத்துக்கு அடியில் பிறந்ததால், அவனுக்கு ஆலநாதன் என்று பெயர் வைப்போம்.
அப்போது-
நம் இளைய குமாரர் பிறந்த நாளில் அதே நேரத்தில் நகரில் மேலும் இரண்டு பையன்கள் பிறந்துள்ளனர்.
எந்தெந்த வீடுகளில்?
நெசவாளர் வீட்டில் பிறந்த பைய னுக்கு சட்டநாதன் என்று பெயர் வைத் துள்ளனர்.
வியாபாரி வீட்டில் பிறந்த பையனுக்கு பாக்கியநாதன் என்று பெயர்.
அவர்களையும் அழைத்து வாருங்கள். என் பையனுக்கு நல்ல துணை.


அந்த மூவரும் சேர்ந்தே விளையாடி னார்கள்.
அடுத்து நான் விளையாட வேண்டும்
ஆலநாதா, உனக்குப் பிறகு பாக்கியநாதனுக்கு வாய்ப்பு கொடு!
சட்டநாதனுக்கு நியாயம் என்ற குணம் இருந்தது.
அவர்களுக்கு 11 வயதானபோது-
நாம் தட்சசிலம் சென்று படிக்க வேண்டும்.
உங்களால் செலவு செய்ய முடியும்...
...ஆனால் என் தந்தை ஓர் ஏழை நெசவாளி. என்னால் உங்களுடன் வரமுடியாது.
உன்னால் முடியும்!
என் தந்தையிடம் பேசினேன். அவர் செலவை ஏற்றுக் கொள்வார்.
அவர் எவ்வளவு நல்லவர்!
தட்சசிலத்தில் படிக்கும் போது-
காலம் ஓடு கிறது!
நம் படிப்பு முடிந்துவிட்டது.
இனி வீடு...
இல்லை. சில காலம் பயணம் செய்யலாம்
நல்ல யோசனை!
பயணம் நம் மனத்தை விசால மாக்கும்.


இங்கும் அங்கும் சுற்றியபடியே அவர்கள் வாரணாசிக்கு வெளியே வந்து சேர்ந்தனர்.
இங்கே இரவு தங்கி ஓய்வு எடுப்போம்.
அதிகாலை சட்டநாதன் விழித்தபோது ஒரு கோழி கொக்கரிப்பதைக் கேட்டான்.
கொக்... கொக்...
ஏன் முட்டைமீது அமர்ந்து இப்படிச் சத்தம் போடு கிறாய்?
இது சாதாரண முட்டை இல்லை. இதன் மஞ்சள் கருவைச் சாப்பிடுபவன் ராஜா ஆவான்...
...இதன் வெள்ளைக் கருவைச் சாப்பிடுபவன் படைத் தளபதி ஆவான்...


...இதன் ஓட்டைச் சாப்பிடுபவன் கருவூலத்தின் பொக்கிஷத்துக்கு அதிகாரி ஆவான்.
அப்படியா!
இந்தக் கோழி சொல்வது உண்மையா என்று நான் கண்டறியவேண்டும்.
சட்டநாதன் முட்டையை எடுத்தான்.
அதிர்ஷ்டத்தைச் சோதிப்போம்.
முட்டையின் மூன்று பாகங்களையும் பிரித்து அவற்றை காலை உணவான கஞ்சியில் கலந்தான்.
இந்தா ஆலநாதா, உன் கஞ்சி.
அதில்தான் மஞ்சள் கரு.
இந்தா பாக்கியநாதா, உன் உணவு.
அதில் வெள்ளைக் கரு.
ஓடு உள்ளதை நான் சாப்பிடறேன்.


சாப்பிட்டு முடித்ததும்-
கோழி சொன்னது உண்மை என்றால், ஆலநாதா, நீ ராஜா ஆவாய். பாக்கியநாதன் தளபதி ஆவான். நான் பொக்கிஷ அதிகாரி ஆவேன்.
என்ன சொல் கிறாய் நீ?
கோழி ஒன்று அந்த முட்டைக்கு அற்புத சக்தி இருப்பதாகச் சொன்ன தைக் கேட்டேன்.
சட்டநாதன் சொன்னவுடன்-
ஆனால் நாங்கள் சாப்பிட வில்லையே?
சாப்பிட்டீர்கள்! நான் பிரித்து ஒவ்வொரு வருக்கும் கொடுத்தேன்.
ஆலநாதனுக்கு மஞ்சள் கரு, பாக்கியநாதனுக்கு வெள்ளைக் கரு, எனக்கு ஓடு.
பாக்கியநாதன் மகிழ்ச்சி அடையவில்லை.
இவன் யார் முடிவு செய்வது? மஞ்சள் கருவை எனக்குக் கொடுத்திருக்கவேண்டும்.
மூவரும் கிளம்பினர்.
எதிர்காலம் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்.
வாராணாசி நகருக்குள் செல்வோம்.


அவர்கள் முதலில் சென்ற வீட்டில் நல்ல வரவேற்பு கிடைத்தது.
உங்களைப் போன்றவர்கள் என் வீட்டுக்கு வருவது நான் செய்த பாக்கியம்!
பிள்ளை இல்லாத எங்கள் ராஜா இறந்துவிட்டார்.
யார் நாட்டை ஆள்வது?
பூவால் அலங்கரிக்கப்பட்ட ஒரு தேரை இன்று அனுப்பு வார்கள். தேரோட்டி யாரும் கிடையாது. ஆனால் தேர் யார் முன் நிற்கிறதோ, அவர்தான் ராஜா என்று அறிவிப்பார்கள்.
அந்த மூன்று இளைஞர்களும் உணவுக்கு நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினர்.
பூங்காவில் ஓய்வெடுப் போம்.
இங்கே குளிர்ச்சியாக உள்ளது.
ஆலநாதன் பூங்காவில் உள்ள கல்மீது படுத்துக் கொண்டான்.


மற்ற இருவரும் அருகில் உள்ள படிகளின்மீது படுத்துக்கொண்டனர்.
சுற்றும் முற்றும் ஏற்பட்ட கூச்சலை அவர்கள் கவனிக்க வில்லை.
ஓடு, ஓடு, பூந்தேர் வந்துவிட்டது.
பின் தொடர் வோம். எங்கே நிற்கிறது என்று பார்ப்போம்.
கூட்டம் தேரின்பின் சென்றது.
பூங்காவின் வாயிலில்
குதிரை பூங்காவுக்குள் செல்ல முற்படு கிறது.
குதிரை நின்று விட்டது!
பூங்காவுக்குள் யார் என்று போய்ப் பார்ப்போம்.
ஆ! என்ன களையான முகம்!


ஆலநாதனின் கால்களை மறைத்திருந்த துணியை பூசாரி விலக்கினார்.
கால்களைப் பார்த்தால் பேரரசர் ஆவார் என்று தோன்றுகிறது.
தூங்கக்கூட விட மாட்டீர்களா, என்ன?
அவன் புரண்டு படுத்து, மீண்டும் தூங்கச் சென்றான்.
முகத்தைப் பாருங்கள்
கால்களைப் பாருங்கள்.
இதற்குள் பெரும் கூச்சல் வந்தது.
சரி, சரி. நான் பேசாமல் எழுந்து விடுகிறேன்.
ராஜ களை!
நீங்கள்தான் எங்கள் ராஜா. மகுடத்தையும் நாட்டையும் ஏற்றுக்கொள்ளுங்கள்!
நானா? எப்படி?
பூந்தேர் கண்டுபிடித்தது. உங்கள் உடலில் அரசர் ஆவதற்கான அனைத்துக் குறிகளும் உள்ளன.
அப்படியா, சரி!


ஆலநாதனை அரசன் ஆக்கினர்.
பாக்கியநாதனை என் தளபதி ஆக்குகிறேன்.
சட்டநாதா, இனி நீ என்னுடனே இருக்க வேண்டும்.
அப்படியே ஆகட்டும்!
மூன்று நண்பர்களும் அரண்மனையில் கழித்தனர். ஒரு நாள்-
பெற்றோரைப் பிரிந்து இருக் கிறேனே...
பாக்கியநாதனிடம்-
அவர்களை அழைத்து வருகிறாயா?
என் வீரர்களை விட்டுச் செல்ல முடியாது.


நீ போவாயா சட்டநாதா?
நிச்சயமாக!
சில வீரர்களுடன் சட்டநாதன் கிளம்பினான்.
ராஜகிருஹத்தில் ஆலநாதன் வீட்டுக்குச் சென்றான்.
உங்கள் மகன் அரசன் ஆகிவிட் டான். நீங்கள் வர வேண்டும்.
மிகவும் மகிழ்ச்சி!
என் தொழிலை விட்டுவிட்டு வரமுடியாது.
தொலைதூரம் சென்று வாழ விருப்பம் இல்லை.
எங்கள் ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சியையும் சொல்.
அப்படியே ஆகட்டும்.
பாக்கியநாதன் வீட்டுக்குச் சென்றான்.
மிகவும் பெருமை என்று மகனிடம் சொல். ஆனால் நாங்கள் வீட்டை விட்டுவிட்டு வரமுடியாது.



சட்டநாதன் தன் வீட்டுக்குச் சென்றான்.
என்னுடன் வாரணாசிக்கு வாருங்கள்.
இந்த இடம் தான் எங்களு டையது.
உன்னுடன் வரமுடியாது.
சட்டநாதன் திரும்பினான்.
ஒரே களைப்பாக உள்ளது.
சட்டநாதனிடம் பணம் தீர்ந்து போய்விட்டது.
பாக்கியநாதனின் வீட்டில் ஓய் வெடுத்துவிட்டு, அரண்மனை செல் கிறேன்.
எஜமானரிடம் சட்ட நாதன் வந்திருப்ப தாகச் சொல்.
உங்கள் நண்பர் சட்ட நாதன் வந்துள்ளார்.
ஆ! பழி வாங்க இதுதான் சரியான சமயம்.
எனக்கு மஞ்சள் கருவைக் கொடுத் திருந்தால் நான் ராஜா.


சட்டநாதனா? அப்படி யாரையும் தெரியாது. அவனை அடித்துத் துரத்திவிடுங்கள்.
எஜமானர் உன்னை அடித்துத் துரத்தச் சொன்னார்.
என்ன?
நன்றிகெட்ட நயவஞ்சகன். என்னால்தான் இவன் இத்தனை வீரர்களுக்குத் தளபதியாக உள்ளான்.
ஆலநாதன் இப்படி நடந்துகொள்ள மாட்டான்.
சட்டநாதன் அரண்மனையை அடைந்தான். மாலையில்–
அரசே, சட்டநாதன் உங்களைப் பார்க்க விரும்புகிறார்.
உடனே அவனை அழைத்துவா.


மிகவும் களைத்துப்
போயிருப்பாய்.
இவர் குளிப்பதற்கும்,
புது உடைகள், ஆபரணங்
களுக்கும் ஏற்பாடு செய்யுங்
கள். இருவரும் சேர்ந்தே
விருந்து உண்ணப் போகிறோம்.
என் பெற்றோரைச்
சந்தித்தாயா?
ம்ம். அவர்கள் இங்கு
வரச் சம்மதிக்க
வில்லை.
அங்கே சந்தோஷமாக
இருப்பார்கள் என்று
நினைக்கிறேன்.
ஆமாம்.
அப்போது பாக்கியநாதன் வந்தான்.
சட்டநாதனா? நிச்சயமாக
அரசனிடம் என்னைப் பற்றிச்
சொல்வான். நான் இங்கே
இருந்தால் என் முன்
சொல்ல பயப்படலாம்.
பாக்கியநாதா,
சட்டநாதன் திரும்பி
வந்துள்ளான்.
பாக்கியநாதனுக்கு
நான் யார் என்றே
தெரியாது.


என்ன?
வரும் வழியில் அவன் வீட்டுக்குச் சென்றேன். அவனோ என்னைத் தெரியாது என்று சொல்லி, வீரர்களைக் கொண்டு தூக்கி எறிந்து விட்டான்.
எங்களுக்குக் கிடைத்துள்ள அந்தஸ்தும் பணமும் உன்னால் தானே வந்தது? நீ நினைத்திருந் தால் நீயே அரசன் ஆகியிருக்கலாமே?
நன்றிகெட்டவர்களுக்குச் செய்யும் உதவி தீயில் கருகிய விதையைப் போல. அந்த விதையிலிருந்து எதுவும் முளைக்காது.
நன்றியுள்ளவர் களுக்குச் செய்யும் உதவி மண் ணில் புதைத்த விதைக்குச் சமம். அதிலிருந்து நிறைய மரங்கள் முளைக்கும்.
அரசன் பாக்கியநாதனிடம்-
சட்ட நாதனைத் தெரியுமா?
பாக்கியநாதனின் மௌனத்தைப் பார்த்த அரசன்-
இவனை இழுத்துச் சென்று மரணதண்டனை தாருங்கள்!


சட்டநாதன் தடுத்தான்.
அப்படிச் செய்யாதீர்கள். யாருக்கும் மீண்டும் உயிர் தருவது எளிதல்ல...
...இவனைக் கொல்லவேண் டாம். மன்னித்துவிடுங்கள்.
உனக்காக விடுகிறேன். ஆனால் இவனை நாடு கடத்துகிறேன்.
இனி நீதான் என் படைத் தளபதி சட்டநாதா!
முடியாது அரசே!
ஏற்றுக்கொள்ள முடியாது. என் குறைகள் எனக்கு நன்றாகத் தெரியும்.
நீ ஏதேனும் ஒரு பதவியில் இருக்கத்தான் வேண்டும்.
நீ ஏன் நிதி அமைச்சர் பதவியை எடுத்துக்கொள்ளக் கூடாது?
என் கடமைகள் என்னென்ன?
தொழில்துறையைச் சேர்ந்தவர்கள் என்ன வரி கட்டவேண்டும் என்று நீதான் தீர் மானிக்கவேண்டும். கருவூலத்துக்கு நீதான் பொறுப்பு.
சரி. அந்தப் பொறுப்பை ஏற்கிறேன்.
சட்டநாதனைத் தன் அருகில் வைத்துக்கொண்டு, ஆலநாதன் பல ஆண்டுகள் நாட்டை நன்றாக ஆண்டான்.


துரதிர்ஷ்டம் பிடித்த கருங்காலி
வாரணாசியில் பிரம்மதத்தன் ஆட்சியின்போது கிருஷ்ண ராஜன் என்ற செல்வந்தர் அங்கே வசித்துவந்தார்.
ஒரு நாள்-
கருங்காலி என்பவர் உங்களைப் பார்க்க வந்துள்ளான்.
அவனைப் பார்த்தால் பிச்சைக்காரன்போலத் தெரிகிறது.
உள்ளே வரச் சொல்!
என் பழைய நண்பனாக இருக்க லாம். இதைப்போன்ற பெயர் உடையவர்கள் மிகக் குறைவே!
அப்படியே ஆகட்டும்.
கருங்காலி தயங்கி உள்ளே வந்தான்.
ஆ! நீதானா! உன்னைப் பார்த்து எத்தனை ஆண் களாகிவிட்டன?
ஆமாம்.


நீ ஏன் இப்படி இருக்கிறாய்?
என் பெயருக்கு ஏற்றார் போலவே எனக்கு எப் போதும் துரதிர்ஷ்டம் தான்.
சே! அப்படிச் சொல்லாதே!
என் நிலை படுமோசமாகவே உள்ளது.
நீ இனிமேல் என்னுடனேயே வாழலாம்.
ஆனால்
உன்னைப் போக விட மாட்டேன். உன் போன்ற நண்பனை எப்படி மறக்க முடியும்?
ஆமாம்! அந்தக் காலத்தில் குருகுலத்தில் நாம் வசித்த நாள்கள்தான் எவ்வளவு மகிழ்ச்சியானவை!
பெரிய தொழில் செய்கிறேன். உன் போன்றவர்கள் என் உதவிக்கு வேண்டும்.
என்னால் உபயோகம் என்றால், இருக் கிறேன்.
கருங்காலி கிருஷ்ணராஜனின் வேலையில் உதவினான்.


அவனை குடும்பத்தில் ஒருவனாகவே நடத்தினர்.
கருங்காலி, சாப்பிட வா!
ஒருநாள் கிருஷ்ண ராஜன்-
இந்தத் தங்கக் காசு களைப் பத்திரமாக வை.
கிருஷ்ணராஜனின் தொழில் நண்பர்கள்-
எப்படி நீ ஒரு அந்நியனை முழுமை யாக நம்பலாம்?
அவன் என் இளமைக் கால நண்பன்.
ஆனால் பல ஆண்டுகளாகி விட்டனவே!
என்ன மோசமான பெயர் - கருங்காலி!
இந்தப் பெயரைச் சொன்னாலே துரதிர்ஷ் டம் வரும் போலத் தெரிகிறது.
சே, நான் நம்பமாட்டேன்.
உன்னோடு எளிதில் ஒருவன் நண்பனாகிவிடலாம்; உன் னுடன் பதினைந்து நாள்கள் இருந்தால் குடும்ப உறுப் பினர் ஆகிவிடலாம்.



குருகுலத்தில் பல ஆண்டுகள் அவனோ வசித்துள்ளேன்.
அவன் பெயர் எப்படி இருந்தாலும் அவன் மிக நல்லவன்!
இவனுடன் நீ எப்படி வசிக்கிறாயோ! எங்களுக்குப் புரிய வில்லை.
உன் இடத்தில் இருந்தால் அவனை ஒழித் திருப்போம்.
ஆனால் நீங்கள் யாரும் என் இடத்தில் இல்லை!
அவன் இங்கே தான் இருப்பான்.
சில மாதங்களுக்குப் பிறகு-
நான் வெளியூர் செல்ல வேண்டும். என் சொந்த ஊரில் ஒரு திருமணம்.
உன் வீட்டை யார் பார்த்துக் கொள்வார்?
கருங்காலி இருக் கிறானே?
அவனை நம்பியா வீட்டை ஒப்படைத்து விட்டுப் போகப் போகிறாய்?
என் உயிரையே ஒப்படைப் பேன்.
கருங்காலி, வீட்டைப் பார்த்துக்கொள்.


உன் வீட்டை இரவும் பகலும் நான் பார்த்துக் கொள்கிறேன்.
பணக்கார கிருஷ்ண ராஜன் ஊரை விட்டுச் செல்கிறான்.
இரவு அவன் வீட்டில் திருடு வோம்.
கருங்காலி இந்த உரையாடலைக் கேட்டுவிட்டான்.
இந்தத் திருடர்களை எப்படி எதிர்கொள்ள முடியும்?
வீட்டில் இருக்கும் வேலைக்காரர்கள் கிழவர்கள். கொள்ளை யர்களை எதிர்க்க முடியாது.
ஆனால் இவர் களை முட்டா ளாக்கிறேன்.
வேலைக்காரர்கள் அனைவரையும் அழைத்தான்.
நீ சங்கை எடுத்து சத்தமாக ஊது.


நீ மேளத்தை பலமாக அடி.
உன் குரல் நன்றாக உள்ளது. நீ பாட்டு பாடு.
மற்ற அனைவரும் சத்தமாகக் கை தட்டுவோம்.
இரவில்-
காலி விட்டுக்குள் நுழைவோம்.
திருடர்கள் வந்ததும்-
AAA
THUMP! THUMP!
விடு காலி என்றாயே?
ஏதோ கொண்டாட்டம் போலத் தெரிகிறது?
CLAP CLAP
மாபெரும் கூட்டம் போலத் தோன்றுகிறது!
வியாபாரி திரும்பிவிட்டான் போல.


யாரும் பார்க்கும் முன் ஓடுவோம்.
ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடு!
அடுத்த நாள் காலை–
இந்த ஆயுதங்களைப் பாருங்கள்!
காலடித் தடங்கள்! திருடர்கள் வந்திருக்க வேண்டும்.
கருங்காலி வெளியே வந்தான்.
ஆமாம், நம்மைக் கொள்ளையடிக்க வந்தார்கள். ஆனால் நாம் போட்ட சத்தத்தில் திருடர்கள் பயந்து ஓடிவிட்டார்கள்.
கிருஷ்ணராஜன் திரும்பியதும் விஷயத்தைக் கேள்விப்பட்டான்.
கருங்காலி புத்திசாலி தான்.
இப்போது புரிகிறதா அவன் எவ்வளவு உபயோகமானவன் என்று!


ஆபத்தில் உதவிய நண்பர்
வாரணாசி அரசரும் அவர் மகனும் அரசாங்க விஷயங்கள் பேசிக்கொண்டிருந்தனர்.
படை வீரர்களை மாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டும்.
தளபதியிடம், புதிய வீரர்களைச் சேர்ப்பது பற்றி பேசினேன்.
அப்போது-
சுவாமி வரதாச்சாரியார் வருகிறாரே! அவரை நான் அழைக்க வேண்டும்.
நீங்கள் ஏன் போக வேண்டும்? அவருக்கும் கொஞ்சம் தானம் கொடுத்தால் போகிறது.
ஆனால் அரசர் சாமியாரை வரவேற்றார்.
வாருங்கள், அமருங்கள்.
அரியணையிலா?
என்ன அதிசயம்!
விரைவில்-
அரசே, உணவு தயாராக உள்ளது. உங்கள் விருந்தினரை அங்கே அழைத்துச் செல்லட்டுமா?
இல்லை, இவர் என்னுடன் உணவு அருந்துவார்.
முதல் அமைச்சர் வரவழைக்கப்பட்டார்.
மேஸ்திரியை அழைத்துவாருங்கள். நம் அரண்மனைக்கு உள்ளேயே சுவாமி வரதாச்சாரியாருக்கு ஒரு கட்டடம் கட்டவேண்டும்.
உங்கள் விருப்பம், அரசே!
வரதாச்சாரியாருக்கு அரசர் அளித்த சலுகைகளை மக்கள் கவனித்தனர்.
ஒரு சாமியாருக்கு ஏன் இந்த ஆட்டம்?
உலகையே வென்றுவந்த ஒரு மாபெரும் வீரனுக்குத் தரும் மரியாதையை அரசர் இவருக்குத் தருகிறாரே?


இளவரசன் காதுகளுக்கு விஷயம் எட்டியது.
தந்தையே, ஏன் இந்த மனிதருக்கு இவ்வளவு மரியாதை தருகிறீர்கள்?
இவர் எதிலும் நிபுணர் கிடையாது. உங்களுக்கு நட்போ, உறவோ கிடையாது.
ஆனாலும் எதற்கு இவருக்கு இந்த ராஜ மரியாதை?
இரு மாதங்களுக்கு முன் மாவட்டங்களில் நடந்த கலவரத்தை ஒடுக்கப் போனேனே, ஞாபகம் உள்ளதா?
வழியில் என் யானை மதம் பிடித்து ஓடியது. எனக்குக் காயம். அதிர்ஷ்டவசமாக நாங்கள் ஓர் ஆசிரமத்தை அடைந்தோம்.
ஆ, கிணறு! எனக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்.
ஆனால் அங்கே நீர் இறைக்க ராட்டை இல்லை. அருகில் உதவ யாரும் இல்லை.
யானையின் காலில் கயிற்றைக் கட்டி கிணற்றில் இறங்குவேன்.
கிணற்றில் இறங்கி குளிர்ந்த நீரைக் குடித்தேன்.


அப்போது-
வழுக்கு கிறதே! மேலே போக முடியாதே!
மாலையில் சுவாமி வரதாச்சாரியார் ஆசிரமம் வந்தார்.
யானை? அதை ஓட்டி வந்த ஆளும் இங்கே இருக்கவேண்டும்.
சுற்றும் முற்றும் பார்த்தார்.
இங்கே இருக் கிறீர்களா, இதோ உதவுகிறேன்.
சாமியார் என்னை வெளியே எடுத்தார்.
பழங்களைச் சாப்பிட்டு ஓய்வெடுங்கள்.
நன்றி.
அடுத்த இரு தினங்கள் சாமியார் என்னைப் பார்த்துக்கொண்டார். பச்சிலை வைத்தியம் செய்தார்.
வாரணாசி வந்து என்னை நீங்கள் சந்திக்கவேண்டும்.
இப்போது சொல், அவர் எவ்வளவு உயர்ந்தவர்!
ஆம் தந்தையே, தங்கள் உயிரை காப்பாற்றிய உத்தமர்.
ஆபத்தில் உதவியவரை மறக்கக் கூடாது.
இனி எனக்கும் அவர் நண்பர்.